திரு. எஸ். முருகையன்: சாத்தனூர் அணையைக் கட்டிய பிறகு ஒவ்வொரு ஆண்டும் தண்ணீர் நிரம்பி வழிந்து ஏராளமாகக் கடலில் போய்க் கலக்கிறது. விரைவில் இந்தத் திட்டத்தை நிறைவேற்றி மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனியாகக் கவனம் செலுத்துவார்களா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: மற்றத் திட்டங்களோடு இதுவும் ஒரு முக்கியமான திட்டம் என்று ஆய்வில் தெரியுமானால் விரைவில் ஏற்பாடு செய்யலாம்.

Rationing of Petrol

* 718 *Q.*—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether it is a fact that the State Government is working out a scheme of petrol rationing for introduction in the State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. என். கே. பழனிசாமி: பெட்ரோல் உபயோகத்தைக் கட்டுப்படுத்த வேண்டுமென்பதற்காக இந்தமாதிரி விலையை ஏற்றி இருக்கிறார்கள். சாதாரணமாக இது மத்திய தர வர்க்கத்தினரைப் பாதிக்கக்கூடியதாக இருப்பதால், மற்ற நாடுகளைப்போல் சனிக் கிழமை, ஞாயிற்றுக் கிழமைகளில் எந்தவிதமான கார்களும் ஓடக்கூடாது . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியைக் கேளுங்கள். யோசனை சொல்லிக் கொண்டிருக்க வேண்டாம்.

திரு. என். கே. பழனிசாமி: ஆகவே, சனிக்கிழமை, ஞாயிற்றுக் கிழமைகளில் கார்களை ஓட்டக்கூடாது என்ற முறையில் மத்திய சர்க்கார் ஆலோசனை சொல்லிற்று? பெட்ரோல் பயன்படுத்து வதைக் குறைப்பதற்கு இந்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பெட்ரோலியப் பொருள்களின் விலை உலக மார்க்கெட்டில் உயர்ந்து கொண்டே போகிறது. இதை உணர்ந்து பெட்ரோல் பயன்படுத்துகிற

1974 ஏப்ரல் 2]

அளவைக் குறைக்க வேண்டுமென்று மத்திய சர்க்கார் கருதிற்று. அதுபற்றி மாநில சர்க்காரை ஆலோசனை கேட்டபோது எந்த அளவுக்குக் குறைக்க வேண்டுமென்று கருதுகிறார்களோ, அந்த அளவுக்குப் பங்கீட்டு முறைதான் சிறந்தது. விலையை உயர்த்து வதால் பணக்காரனுக்குப் பலன் ஏற்படுமே தவிர, ஏழை நடுத்தர மக்களுக்குப் பலன் தராது; ஆகவே, பங்கீட்டு முறைதான் சிறந்தது என்று இந்த அரசு எடுத்துச் சொல்லிற்று. ஆனால் அவர்கள் விலையை உயர்த்தினார்களே தவிர, பங்கீட்டு முறையை ஏற்றுக்கொள்ளவில்லை.

சனிக்கிழமை, ஞாயிற்றுக் கிழமைகளில் இந்த வாகனங்கள் எல்லாம் ஓடாமல் தடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதை இந்த அரசாங்கம் ஏற்றுக் கொள்ளவில்லை. அவசியமான, தேவை யான, அவசரமான பயணங்களை மேற்கொள்ளவேண்டி வரலாம். அந்த முறை நம்மைப் பொறுத்தவரை சரியாக இருக்காது.

அரசாங்கம் பயன்படுத்தும் வாகனங்களைப் பொறுத்தவரை இந்தச் சதவிகித வெட்டு அமல்படுத்தப்பட்டிருக்கிறது.

திரு. ஏ. சி. நரசிம்மன்: பெட்ரோல் விலை ஏகமாகக் கூடிவிட்ட காரணத்தால் டாக்சிக்காரர்கள் தொழில் பாதிக்கப்படும் நிலைமை இருக்கிறது. அவர்களுக்கு ரேஷன் வைத்து முன்பு இருந்த விலையில் ஒரு நாளைக்கு ஐந்து லிட்டரோ அல்லது பத்து லிட்டரோ கொடுத்தால் நடுத்தர மக்களுக்கும், டாக்சிக்காரர்களுக்கும், டாக்சி டிரைவர்களுக்கும் நல்ல நன்மையைச் செய்வதாக இருக்கும். இந்தக் கருத்து வலியுறுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: 29—9—1973-ல் பல் வேறு மாநில அதிகாரிகள் கலந்து கொண்ட குழுக் கூட்டம் டில்லியில் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் நம்முடைய அரசின் சார்பில் இந்தப் பங்கீட்டு முறைதான் உயர்ந்தது, விலையை உயர்த்துவதற்குப் பதிலாக பங்கீட்டு முறையைக் கொண்டு வருவது ஏழை எளிய டாக்சி டிரைவர்கள், ஆட்டோ ரிக்ஷா டிரைவர்கள் மற்றவர்களுக்குப் பலன் அளிக்கக் கூடியது. பெட்ரோல் விலையை உயர்த்துவதன் மூலம் கள்ள மார்க்கெட் பணம் வைத்திருப்பவர் களுக்குச் சௌகரியமாக இருக்குமே தவிர ஏழைகளுக்கு நன்மை பயக்காது என்பதை வலியுறுத்தி எடுத்துச் சொன்னோம். மத்திய சர்க்கார் இந்த யோசனையை ஏற்றுக்கொள்ளவில்லை.

[1974 ஏப்ரல் 2

திரு. கே. டி. கே. தங்கமணி : சமீபத்தில் பத்திரிகையில் ஒரு செய்தி வந்தது. தமிழ்நாட்டிலும் இன்னொரு மாநிலத்திலும் டாக்சி டிரைவர்களுக்குப் பெட்ரோல் குறைந்த விலையில் கொடுக்கப்படும் என்று சொல்லப்பட்டது. அந்த டாக்சி டிரைவர்களின் லைசென்ஸை வைத்து ஒவ்வொருவருக்கும் இவ்வளவு பெட்ரோல் என்று நிச்சயித்து குறைந்த விலையில் பெட்ரோல் கொடுக்கும் செயற்குறிப்பு இருக்கிறதா? மத்திய சர்க்காருக்கு ஆலோசனை சொல்லியிருக்கிறார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அத்தகைய செயற்குறிப்பு எதுவும் அரசாங்கத்தில் இல்லை. மத்திய சர்க்காரைப் பொருத்தவரை எந்த ஆலோசனையையும் அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை.

திரு. கு. காமாட்சி : பெட்ரோலைப் பற்றி நல்ல அரிய யோசனைகளை நம்முடைய அரசு மத்திய அரசுக்குச் சொல்லியிருக்கிறது. பழையபடி இன்னொரு முறை அவற்றை நம்முடைய அரசு வலியுறுத்துமா? வேண்டுமானால் இந்த மாமன்றத்தில் ஒரு தீர்மானம் போட்டு, அதன் வாயிலாக மத்திய சர்க்காருக்குத் தெரியப்படுத்தி, இந்த முறையை அனுசரிக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அரிய யோசனைகள் எதையும் மத்திய அரசு ஏற்று பழக்கப்பட்டது அல்ல. ஆகவே, தீர்மானம் பலன் அளிக்காது.

திரு. கோவை செழியன் : கார் வைத்திருப்பவர்கள் எல்லாம் வசதியுள்ளவர்கள் அல்ல. கார் என்பது இப்போது வாழ்க்கையிலே அத்தியாவசியப் பொருளாகிவிட்டது. ஆனால் இன்றைக்கு விற்கின்ற பெட்ரோல் விலையில் காரைக் குதிரை கட்டி இழுத்தால்தான் முடியும் என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியைக் கேளுங்கள். யோசனை சொல்லிக் கொண்டிருக்கக்கூடாது.

திரு. கோவை செழியன் : அந்தக் கார்களுக்கு டீசல் என்ஞ்சின் பொருத்த வழிவகை செய்யவேண்டும். இப்போது டீசல் என்ஞ்சின் தனியாகத் தருவதில்லை. கார்களுக்கு டீசல்

1974 ஏப்ரல் 2]

என்ஞ்சின் தருவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்தால் மிகவும் பயன் உள்ளதாக இருக்கும். இந்த நல்ல காரியத்தை அரசு செய்யுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : கார் அத்தியாவசியப் பொருள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுவதை ஏற்றுக்கொள்வதற்கில்லை. கார்களிலே வேண்டுமானால் வாடகைக் கார்கள் இருக்கலாம். சொந்தக் கார்களுக்கு அவசியமே இல்லை. மாநகரப் போக்குவரத்து நெரிசலுக்கு அவைகளும் காரணம். சென்னை மாநகரத்தில் கார்கள் இல்லையென்றால் எவ்வளவோ பஸ்களை விடலாம். எல்லோருக்கும் பயன்படும். கார்கள் தடுக்கப்பட வேண்டிய ஒன்று. இன்று இருக்கும் நிலையில் அதற்கு முடியாமல் இருந்து கொண்டிருக்கிறோம். டீசல் எஞ்சின் பொருத்தலாமா, மற்ற எஞ்சின் பொருத்தலாமா என்ற பிரச்னை எழவில்லை.

திரு. கே. ஆர். கிருஷ்ணன் : தலைவரவர்களே, பெட்ரோல் வெட்டு வந்தவுடன் அரசாங்க ஜீப்களில் மைலோமீட்டரை பிடுங்கிவிட்டு ஓட்டுவதாகச் சொல்லப்படுகிறது, அது அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதைப் புகாராகக் கொடுக்கவேண்டும்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் ஏழை எளியவர்கள் சார்பாக மத்திய அரசோடு வாதாடியதாகச் சொன்னார்கள். சட்டமன்ற உறுப்பினர்களும் ஏழை எளியவர்கள்தான். அவர்கள் தொகுதிகளில் அரசாங்க பஸ்களில் போவதற்குப் பதிலாக அவர்களுக்குக் காரில் செல்வதற்கு ரேஷன் முறையில் குறைந்த விலையில் பெட்ரோல் கொடுக்க இந்த அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் ஏழைகளின் பிரதிநிதிகள் என்பதை அரசு ஏற்றுக்கொள்கிறது. ரேஷன் முறை எல்லோருக்கும் வரவேண்டுமென்று குறிப்பிட்டோம். எல்லோருக்கும் கிடைக்கக் கூடிய வகையில் அமல்படுத்துவது கூட சுலபமாக இருக்கும்.

ஆனால் அதிலே நிர்வாக சங்கடங்கள் ஏற்படும் என்ற காரணத்தால், அல்லது அதிக நிர்வாகச் செலவு ஏற்படும் என்று கருதியோ என்னவோ மத்திய அரசு அதை ஏற்றுக்கொள்ளவில்லை.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, சாராயத்திலிருந்து பெட்ரோல் தயாரிக்கலாம் என்ற கருத்து இருக்கிறது. அதற்காக இந்த அரசு முயற்சி செய்து கொண்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, இது எல்லாம் விஞ்ஞான கூடத்திற்கு அனுப்பவேண்டிய யோசனை.

சென்னையில் டாக்ஸி, ஆட்டோ ரிக்ஷாக்கள்.

*719 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தற்போது சென்னை நகரில் ஓடும் டாக்ஸி, ஆட்டோ ரிக்ஷாக்களின் எண்ணிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: 15—2—1974 முடிய சென்னை நகரில் ஓடும் டாக்ஸி, ஆட்டோ ரிக்ஷாக்களின் எண்ணிக்கை முறையே 3,745, 842 ஆகும்.

*720 Q.—THIRU N. DENNIS:
THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether there is any proposal under the consideration of the Government to increase the number of licences for the plying of autorickshaws in Madras City; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) & (இ) போலீஸ் ஆணையாளரிடம் இருந்து சென்னை மாநகரில் ஆட்டோ ரிக்ஷாக்களின் எண்ணிக்கைக் குறித்து உச்சவரம்பினை 900-லிருந்து 1,150 ஆக உயர்த்த செயற்குறிப்பு வந்துள்ளது. இது அரசின் பரிசீலனையில் உள்ளது.